### தமிழ்நாட்டில் சம்பா பருவத்திற்குத் தேவையான உரம் இருப்பு - விநியோகத்தை உறுதி செய்ய

# வேளாண்மைத் துறை மாவட்ட அலுவலர்கள் - உர உற்பத்தி நிறுவனங்களுடன் ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது!



தலைமைச் செயலகத்தில், 13.10.2025 அன்று வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில், தமிழ்நாட்டில் உர இருப்பு மற்றும் உர விநியோகம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசுச் செயலாளர் வ.தட்சிணா மூர்த்தி, வணிகத்துறை ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பி. முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, அக். 16-
வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் “தமிழ்நாட்டில் சம்பா பருவத்திற்கு தேவையான உரம் இருப்பு மற்றும் விநியோகத்தை உறுதி செய்வது” குறித்து வேளாண்மைத்துறை மாவட்ட அலுவலர்கள் மற்றும் உர உற்பத்தி நிறுவனங்களுடன் 13.10.2025 அன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

. வேளாண்மை - உழவர் நலத்துறையின் சீரிய திட்டங்களால் நடப்பு ஆண்டில் மொத்தம் 55 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. கார்/குறுவை/சொர்ணவாரி பருவத்தில் 12 இலட்சத்து 33 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு அறுவடைப்பணிகள் நடைபெற்று வருகிறது. நெல் கொள்முதலும் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 50 ஆண்டுகாலமாக இல்லாத அளவிற்கு நெல் விளைச்சல் அமோகமாக விளைந்துள்ளது. மேலும், 33 இலட்சம் ஏக்கரில் சம்பா / தாளடி/ பிசானம் பருவங்களில் நெல் சாகுபடி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை, 10 இலட்சத்து 35 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தவிர, நவரை, கோடை பருவங்களில் 10 இலட்சம் ஏக்கர் நெல் சாகுபடி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், கடந்த நான்கரை ஆண்டுகளில் 1.86 இலட்சம் இலவச மின் இணைப்புகள் விவசாயிகள் நலன் கருதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் சாகுபடி பரப்பும் 3.62 இலட்சம் ஏக்கர் விரிவடைந்துள்ளது. குறித்த நேரத்தில் மேட்டூர் அணை திறக்கப்பட்டு பாசன வசதிக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொதுவாக டெல்டா மாவட்டங்களுக்கு அறிவிக்கப்பட்டு வந்த குறுவை சிறப்பு தொகுப்பு

திட்டம் முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி இந்த ஆண்டு டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டது. இதற்கென இந்தாண்டு மொத்தமாக ரூ.215 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், வடகிழக்குப் பருவமழை அக்டோபர் 16 ஆம் தேதி தொடங்கும் என்றும், வடமாவட்டங்களில் இயல்பாகவும், இயல்பைவிட அதிகமாவும், தென்மாவட்டங்களில் இயல்பாகவும், இயல்பை விடக்குறைவாகவும் இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. எனவே, முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு கூடுதலாக உரங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று பாரத பிரதமர் அவர்களிடம் கடிதம் வாயிலாகக் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு, கூடுதலாக 12 ஆயிரம் மெட்ரிக் டன் யூரியா ஒதுக்கீடு செய்துள்ளது. இதனைப் பெற்று, தேவைப்படும் விவசாயிகளுக்கு முறையாக விநியோகம் செய்திட வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 30.09.2025 அன்று உர இருப்பு குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின் தொடர்ச்சியாக இன்று சம்பா பருவத்திற்கு தேவையான உரங்கள் எவ்விதத் தடையுமின்றிக் இருப்பு வைத்து விநியோகம் செய்திட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் 13.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத்துறை அலுவலர் கள், வேளாண்மைத்துறை மாவட்ட அலுவலர்கள் மற்றும் உர உற்பத்தி நிறுவனங்களுடன் விரிவான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், மாதாந்திர உர ஒதுக்கீட்டின்படி உர உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள், கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் யூரியா உள்ளிட்ட அனைத்து உரங்களையும் எவ்வித குறைவும் இன்றி விநியோகம் செய்திட வேண்டும் என்றும், சில்லரை விற்பனை நிலையங்களில் மானிய விலையில் உரங்களை விநியோகம் செய்யும்போது எவ்வித இணை இடுபொருட்கள் கட்டாயப்படுத்தி விற்பனை செய்யக்கூடாது எனவும் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் நடப்பு சம்பா (இராபி) பருவத்தில் அதிக உரத் தேவையுள்ள மாதங்களான அக்டோபர், நவம்பர் மாதத்திற்கு தேவையான இருப்பை முன்கூட்டியே இருப்பு வைக்க வேண்டும் என்றும் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

மேலும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED), தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் (TCMF) ஆகிய நிறுவனங்கள், கூட்டுறவு விற்பனை நிலையங்களில், சம்பா பருவ தேவைக்கேற்ப போதுமான உரங்களை இருப்பு வைக்கவும், விற்பனை முனையக் கருவி இருப்பு (PoS இருப்பு) மற்றும் உண்மை இருப்பினை நிகர் செய்திட ஆய்வுக் குழு அமைத்துக் கண்காணிக்க வேண்டும் என்றும், இரயில் முனையங்களுக்கு வரும் உரங்களை கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு நகர்வு செய்திட பிரதிநிதிகளை நியமித்து தொடர் கண்காணிப்பு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு), தங்களது மாவட்டங்களில் உர இருப்பு மற்றும் விநியோகம் தொடர்பாக தினசரி சில்லரை உர விற்பனை நிலையங்கள் வாரியாக உர இருப்பை கண்காணிக்க வேண்டும் என்றும், போதுமான உரங்களை தேவைக்கேற்ப உடனடியாக இருப்பு வைக்கவும், இருப்பு ஏதும் இல்லாத கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு உடனடியக இருப்பு வைத்திட தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

விவசாயிகளுக்கு தேவைக்கேற்ப மட்டும் இரசாயன உரங்களை பயன்படுத்தவும், இரசாயன உரங்களின் பயன்பாட்டினைக் குறைத்து இதர உரங்களான பசுந்தாள் உரம், உயிரி உரம், மற்றும் உயிர்ம உரங்களை பயன்படுத்த விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மாவட்டங்களில் விவசாயிகள் பயிர் சாகுபடியில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளைக் கண்டறிந்து களைய வேண்டும் என்றும், உரத்தட்டுபாட்டினை போக்கிட அடுத்த இருவாரங்களுக்கு தேவைப்படும் உரங்களை காலம் தாழ்த்தாது இருப்பு வைத்து விநியோகம் செய்வதை கண்காணிக்க வேண்டும் என்றும், தற்போது நிலவும் சாதகமான சூழ்நிலையால் சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளதால் அதற்கேற்றவாறு தேவையான உரங்கள், விதைகள் உள்ளிட்ட இடுபொருட்கள் அளவினை முன்கூட்டியே மதிப்பீடு செய்து உரிய தேவைப்பட்டியலை அளிக்கவேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

மேலும், தற்போது பல்வேறு மாவட்டங்களில் மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளதாலும், வடகிழக்கு பருவ மழையை விரைவில் எதிர்பார்க்கப்படுவதாலும், சாகுபடி பணிகள், பயிர் மேலாண்மை முறைகள் குறித்து வேளாண்மை இயக்குநரிடமிருந்து அனைத்து மாவட்டங்களுக்கும் உரிய அறிவுரைகள் (ADVISORY) வழங்கிட வேண்டும் என்றும், பகுதி சார்ந்த, பயிர்சார்ந்த உர மேலாண்மை, பூச்சி நோய் மேலாண்மை, உள்ளிட்டவை குறித்து வேளாண்மைத்துறை அலுவலர்கள் ஊடகங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு தெரிவித்திட வேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

தமிழ்நாட்டில் உள்ள 14,383 மொத்தம் மற்றும் சில்லரை விற்பனை நிலையங்கள், உரக்கிடங்குகள், உர உற்பத்தி நிறுவனங்களில் வேளாண்மைத்துறையால் அமைக்கப்பட்ட சிறப்புக் கண்காணிப்புக் குழுக்களால் (SPECIAL INSPECTION SQUADS) திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985ன்படி 1,409 விதிமீற ல்கள் கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஒருசில மாவட்டங்களில் தண்டுத்துளைப்பான், புகையான், இலைச் சுருட்டுப்புழு மற்றும் பாசி வளர்ச்சியால் சம்பா நெற்பயிர் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள், வேளாண் அறிவியல் நிலைய தொழில் நுட்ப வல்லுநர்கள்,

வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மை துணை இயக்குநர், வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்களைக் கொண்ட குழு அமைத்து வயல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய பரிந்துரைகள் வழங்கப்பட்டதுடன், விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த முறையில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள பல்வேறு ஊடகங்கள் வாயிலாக அறிவுரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் தினந்தோறும் விவசாயிகளுக்கு ஏற்படும் வேளாண் தொடர்பான பிரச்சினைகள், பூச்சி / உரம் இருப்பு மற்றும் இதர பிரச்சினைகளை அறிந்து நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இயக்குநரகத்தில் ஒரு சிறப்பு கண்காணிப்பு பிரிவினை ஏற்படுத்தி கண்காணிக்க வேண்டும்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர்,

த.ஆபிரகாம், வேளாண்மைத்துறை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமார வேல் பாண்டியன், மேலாளர், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், மேலாளர், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள், மாவட்ட அலுவலர்கள் மற்றும் உர உற்பத்தி / இறக்குமதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

## பூதக்குடி ஊராட்சி மாற்றியமைப்பு!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை மத்திய ஒன்றியத்தில் உள்ள “பூதக்குடி ஊராட்சி” இனி, விராலிமலை மேற்கு ஒன்றியத்தில் தொடர்ந்து செயல்படும்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 14.10.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

---



தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற அலுவலக கூட்டரங்கில் அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில் உயர்கல்வித் தரத்தினை மேலும் உயர்த்திடவும் உயர்கல்வியை மாணாக்கர்களுக்கு கொண்டு சேர்ப்பதை உறுதி செய்திடவும் உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் 13 பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் உள் தர உறுதிப்பிரிவு ஒருங்கிணைப்பாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

---

### எம்.பி.க்கள் வாரத்தில் 4 நாட்கள் தொகுதியில் தங்கி மக்களைச் சந்திக்க முதல்வர் அறிவுறுத்தல்!

# அனைத்துக் கட்சிகளும் இம்முறையைப் பின்பற்றினால் தமிழக மக்களின் குறைகள் தீரும்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, அக். 16 -
“தமிழ்நாட்டு எம்.பி.க்கள் வாரத்தில் 4 நாட்கள் தொகுதியில் தங்கி மக்களைச் சந்திக்க வேண்டும் என்ற முதல்வரின் அறிவுறுத்தலை அனைத்துக் கட்சிகளும் பின்பற்றினால் தமிழக மக்களின் குறைகள் தீரும்” என்று ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து 14.10.2025 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

2,500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சீன தத்துவ மேதை லாவோ சூ, உதிர்த்த எண்ணற்ற தத்துவங்கள் இன்றும் எல்லா நாடுகளிலும் பல மேற்கோள்களுக்கு சுட்டிக் காட்டப்படுகின்றன.

மறைந்த அண்ணா அவரது எழுத்துக்கள் மீது அதிக ஈர்ப்பு கொண்டவர். அவர் சொன்ன ஒரு தத்துவம் அன்று மட்டுமல்ல, இன்றும், என்றும் அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் மட்டுமல்லாமல் பொது சேவையில் உள்ள அனைவரும் பின்பற்றக் கூடிய வகையில் பாடங்களை கற்றுக்கொடுப்பதாக இருக்கிறது. அன்று அவர் சொன்னது, “மக்களிடம் செல், அவர்களுடன் வாழ். அவர்களிடம் இருந்து கற்றுக் கொள். அவர்களை நேசி. அவர்கள் அறிந்தவற்றில் இருந்து தொடங்கு. அவர்களிடம் உள்ளவற்றைக் கொண்டு கட்டமை”.

இந்த வாசகங்களைத் தான் அண்ணா, தி.மு.க.வில் உள்ள தன் தம்பிகள் மக்கள் பணியில் சிறக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் அடிக்கடி குறிப்பிடுவார். அதனை இப்போது முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் கையில் எடுத்துள்ளார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களோடு இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில் சில திட்டங்களை வகுத்துக் கொடுத்துள்ளார். ஏற்கனவே அமைச்சர்கள் வேலை நாட்களில் மட்டும் தலைமைச்செயலகத்தில் இருந்து தங்கள் பணிகளை கவனித்துவிட்டு வார இறுதி நாட்களில் தங்கள் தொகுதிக்கும், மாவட்டங்களுக்கும் சென்று மக்கள் பணி ஆற்றவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவுக்கு பிறகு அமைச்சர்களை வார இறுதியில் சென்னையில் பார்க்கமுடியவில்லை. தங்கள் மாவட்டங்களிலேயே சுற்றுப்பயணம் சென்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

அடுத்து முதலமைச்சருடைய பார்வை இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது விழுந்துவிட்டது. சமீபத்தில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்டி பல ஆலோசனைகளை வழங்கினார். அப்போது அவர், நாடாளுமன்றம் நடைபெறும் நாட்களைத் தவிர்த்து குறைந்தது வாரத்தில் 4 நாட்கள் தங்கள் தொகுதியில் தங்கி மக்களைச் சந்தித்து, அவர்களுக்குத் தேவையான பணிகளை செய்யவேண்டும் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் தொகுதியில் ஆற்றிய மக்கள் பணிகள், நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டு மக்களின் நலனை காத்திடும் வகையில் எடுத்துரைத்த கருத்துக்கள் ஆகியவை பற்றிய அறிக்கையை 15 நாட்களுக்கு ஒருமுறை தனக்கு அளித்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

ஆக தமிழ்நாட்டில் தி.மு.க. எம்.பி.க்களை தொகுதியில் உள்ள மக்கள் இனி வாரத்துக்கு 4 நாட்கள் சந்தித்து தங்கள் குறைகளை சொல்லமுடியும். இனி தொகுதி மக்கள் தங்களுடைய எம்.பி.க்களை எந்த கஷ்டமும் இன்றி எளிதாக சந்திக்கலாம். நாடாளுமன்றத்தில் தமிழக மக்கள் நலன் குறித்து பேசிய விவரங்களையும், முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டு இருப்பதால் அவருக்கு அனுப்பும் அறிக்கையில் சொல்லவேண்டும் என்பதற்காகவும், இனி நாடாளுமன்றத்தில் நிச்சயம் கேள்விகளை கேட்க வேண்டும். விவாதங்களில் பங்கு கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்துக்கு எம்.பி.க்கள் ஆளாகியுள்ளனர். இதேமுறையை அனைத்துக் கட்சிகளும் பின்பற்றினால் தமிழக மக்களின் குறைகளெல்லாம் நிறைவாகும்.




இதேபோல அனைத்து தொகுதிகளிலும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக இப்போது ஒன்றிய அரசாங்கம் ஆண்டுக்கு ரூ.5 கோடி வழங்குவதை ரூ.10 கோடியாக உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையையும் வலியுறுத்தியுள்ளார். தமிழக அரசு எம்.எல்.ஏ.க்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதியாக ரூ.3 கோடி வழங்கும் நிலையில் 6 சட்டமன்றத் தொகுதிகளைக்கொண்ட ஒரு எம்.பி. தொகுதிக்கு ரூ.10 கோடி வழங்கவேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதுதான்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம் எண்ணேகொள்புதூரில் 2024–2025 15வது நிதிக்குழு மானியம் 30.58 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை , மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார் . நிகழ்ச்சியில் அன்பரசன், கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சித்ரா சந்திரசேகர், செந்தில், தனசேகரன், அஸ்லாம், வேல்மணி உள்ளிட்ட கழக முன்னணியினர், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர் .

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாச்சியார்கோவில் ஆர்.பாண்டுரெங்கன்
### அக்டோபர் 16 (2011)



**தஞ்சை மாவட்டத்தில் கழகம் துவங்கியபோது கும்பகோணம் பகுதியில் நூற்றுக்கணக்கான இளைஞர்களை இயக்கத்தில் சேர்த்த பெருமைக்குரியவர்.**

**கே.கே.நீலமேகம், மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி, குடந்தை பத்மநாபன் ஆகியோருடன் இணைந்து கழகப் பணியாற்றியவர்.**

**குடந்தை, நாச்சியார்கோவில் பகுதிகளில் பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரை அழைத்து பல பொதுக்கூட்டங்களை நடத்தியவர்.**

**கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**